அசல் வழக்கு எண். 164/2012 தேதி. 13.02.2020

வா.சா.1 அருணாசலம்

<u>6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.115/2012 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கும் உயிலின் அடிப்படையில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த உயில் மோசடியான உயில் என்றும், அந்த உயிலின் பேரில் கொடுக்கப்பட்ட பட்டா தவறான பட்டா என வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்துள்ளேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிறக்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும், இதர பிரதிவாதிகளுக்குமிடையே வாரிசு சம்மந்தமான பிரச்சனை உள்ளது. பட்டா தொடர்பாக முடிவு செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்றால் சரியல்ல. முறைப்படி வருவாய் துறையில் முறையிடாமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

(9 முதல் 16 வரையான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)